From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.76/16

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Balan | Taluk | :Muniyandi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :13.02.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

**(எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் இல்லை. சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்)**

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் அ.சா1னிடம் 27 வருடங்களாக கார் டிரைவராக பணியாற்றி வருகிறேன். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு தூத்துக்குடியிலிருந்து அ.சா1 சான்டபி மாடால் காரில் TN 69 3888 என்ற எண் கொண்ட வாகனத்தில் பாணடிச்சேரியை நோக்கி மேலூர் வழியாக சென்று கொண்டிருந்தோம். நான் ஓட்டிய காரில் அ.சா1, அ.சா2, மற்றும் வயதான ராஜலெட்சுமி, சுந்தரி ஆகியோர் நான் காரை ஓட்ட 4 பேரும் பயணம் செய்தோம். விபத்தில் இறந்துபோன மாரிமுத்து, தனவதி, பிரியஷா, பிரதீப் ஆகியோர் அ.சா1, அச2 ன் உறவினர்கள் ஆவார்கள், அவர்களும் தூத்துக்குடியிலிருந்து பாண்டிச்சேரிக்கு எங்கள் காருடன் எங்களுக்கு பின்னால் வந்தார்கள். இவ வழக்கில் இறந்துபோன மாரிமுத்துவின் காரை அவருடைய கார் டிரைவர் ஓட்டிவந்தார். தற்போது டிரைவரின் பெயர் ஞாபகம் இல்லை.

ஒத்தக்கடை சாலைபிரிவிலிருந்து 1 கி.மீ தூத்தில் ஏடுபி, தாபா ஆகியவைகள் உள்ள காலை சாப்பிட ஹோட்டலுக்கு போனோம். அவர்களும் சாப்பிடுவதற்காக வருவதற்காக நாங்கள் காத்துக்கொண்டு இருந்தோம் வரவில்லை. அந்த ஹோட்டலில் சாப்பிட வந்த ஒருவர் ஏதோ கார் விபத்துக்குள்ளாகிவிட்டது என்று சொன்னார் அதை கோட்ட அ.சா1, அசா.2 மற்றும் நானும் சந்தேகப்பட்டு சம்பவ இடத்தை போய்

பார்த்தோம். அப்போது சுமார் காலை 08.45 இருக்கும். நாங்கள் ஒத்தக்கடை சாலை பிரிவில் விபத்து நடந்துள்ளதை பார்த்தோம். எங்களுக்கு பினனால் வந்த விபத்துக்குள்ளான கார்மீது தனியார் பேருந்து அதிவேகமாக வந்து ஒத்தக்கடை சாலை பிரிவில் திரும்பும்போது சிக்னல் ஏதும் செய்யாமல் திடிரென திரும்பியதால் சென்றுக்கொண்டிருந்த கார்மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. விபத்துக்குள்ளான கார் நம்பர் எனக்கு ஞாபகம் இல்லை. விபத்து ஏற்படுத்திய பஸ் நம்பரும் எனக்கு ஞாபகம் இல்லை. அதில் மாரிமுத்து, தனவதி சம்பவத்தில் இறந்துவிட்டார். பிரியஷா, பிரதீப் ஆகிய இருவர்கள் உயிரும் ஆபத்தான நிலையில் இருந்ததால் அவர்களை மதுரை அப்போலோவிற்கு கொண்டு சென்றுவிட்டார்கள், மற்றவர்கள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதால் அவர்களை மதுரை அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.